**செய்தி வெளியீடு எண் : 1156** **நாள் : 12.06.2023**

**தேசிய உற்பத்தித்திறன் குழு** (NPC)
**வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம்** (DPIIT), **இந்திய அரசு**
**சார்பில்**
**"உற்பத்தித்திறன் மற்றும் பசுமை வளர்ச்சி: புதிய ஒன்றோடொன்று இணைந்த முன்மாதிரிகள்"**

உலகம் காலநிலை மாற்றத்தின் அவசரநிலையை எதிர்கொண்டுள்ளது. இந்தய அரசும், இத்தகைய அமிர்தகாலத்தின் போது, காலநிலை மாற்றத்திற்கேற்றாவாறு தீர்க்கமான சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறையை (LiFE) முன்னோக்கி செல்கிறது. ஜப்பான் நாட்டை தலைமையிடமாய் கொண்ட ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பு, அதன் தொலைநோக்கு பார்வை 2025 அடிப்படையில் பல செயல்பாடுகளை முன்மொழிந்துள்ளது.

இத்தகைய சூழலில், APO (ஆ. உ.அ) ஆதரவுடன், இந்திய அரசின், வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் கீழ், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு துறையின் (DPIIT), ஓர் தன்னாட்சி அமைப்பாக செயல்ப்பட்டு வரும், தேசிய உற்பத்திறன் குழு (NPC). "உற்பத்தி மற்றும் பசுமை வளர்ச்சி: புதிய ஒன்றோடொன்று இணைந்த முன்மாதிரிகள்" என்ற தலைப்பில் APO ஆதரவுடன் கூடிய மூன்று நாள் சர்வதேச மாநாட்டை சென்னையில் 14 ஜூன் முதல் 16 ஜூன் 2023 வரை ஏற்பாடு செய்ய உள்ளது. சென்னையை தலைமையிடமாய் கொண்டு பல்த்தர சேவைகளை வழங்கும் இந்தியன் பொட்டாஷ் லிமிடெட்(IPL) நிறுவனம், இந்த மாநாட்டின் தொழில் பங்குதாரராக உள்ளது.

இம்மாநாட்டில், பசுமை வளர்ச்சியின் பல்வேறு முன்மாதிரிகளான சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிர்வாகம் (ESG), ஆற்றல் உற்பத்தியை மேம்படுத்துதல், பசுமை நிதி, பசுமை மறு–திறன், நிறுவன உத்திகள் மற்றும் நிகர–பூஜ்ஜிய உமிழ்வு இலக்குகள் போன்ற கருத்துருக்களின் விவாதங்கள் நடைப்பெறும்.

மேம்படுத்தப்பட்ட பசுமை வளர்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான உத்திகள் குறித்து விவாதிக்க பதினாறு நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் மற்றும் பிரதிநிதிகள் சென்னையில் ஒன்று கூடுகிறார்கள். இந்த மாநாட்டில் முக்கிய விளக்கக்காட்சிகள், குழு விவாதங்கள் மற்றும் கொள்கை கட்டமைப்புகள் மற்றும் பசுமை வளர்ச்சியில் கவனம் செலுத்தும் தொழில்துறையில் வளர்ந்து வரும் போக்குகள் பற்றிய அறிவுப் பகிர்வு அமர்வுகள் இருக்கும்.

இந்த மாநாட்டின் தொடக்க சிறப்பு விருந்தினராக APO இன் பொதுச் செயலாளர் டாக்டர். இந்திர பிரதானா சிங்கவினாடா உரை ஆற்றுகிறார். மேலும், APO தேசிய விருதுகள் , திரு ஜி.எம். ராவ், குழுத்தலைவர், GMR குழுமம் மற்றும் பேராசிரியர் பிரதீப் குமார். ரே, பேராசிரியர், IIT காரக்பூர் ஆகியோருக்கு வழங்கபடவுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் குழு (NPC) இன் பொது இயக்குனர், திரு சந்தீப் குமார் நாயக், இ.ஆ.ப, அவர்கள், இம்மாநாட்டினைக் குறித்து பேசுகையில், நீண்ட

இடைவெளிக்குப் பிறகு சென்னையில் APO மாநாடு நடைபெறுவதாகவும், இது இந்தியா நிலையான வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்துவதற்கு ஓர் முன்மாதிரியாக உள்ளது என உரைத்தார். மேலும், மாண்புமிகு இந்திய பிரதமரால் நிர்ணயிக்கப்பட்ட நிகர பூஜ்ஜிய இலக்குகளின் அடிப்படையில் பார்க்கும்போது, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையில் இந்தியாவின் சாதனை ஓர் முன்மாதிரியாக திகழ்கின்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

இம்மாநாட்டில் பேசும் சர்வதேச நிபுணர்களில், கொரியாவைச் சேர்ந்த டாக்டர். ஹங் சக் பார்க், அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர். கௌஷிக் டெப், , சிங்கப்பூரைச் சேர்ந்த திரு. நிக்கோலஸ் காண்டோல்போ, இந்தியாவை சேர்ந்த டாக்டர். கணேசன் கண்ணபிரான் (இயக்குனர், IIIT சித்தூர்), மற்றும் டாக்டர். ஜே. நாகேஷ் குமார் (இயக்குனர், CEEP, சென்னை). ஆகியோர் குறிப்பிட வேண்டிய நிபுணர்களாவர்கள்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in